03. 11. 2025.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண்.205/2018</u>

அ.சா.37

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. நாகமுத்து | | |
| க /பெ | விஜய்ஆனந்த் | | |
| கிராமம் | திருவெறும்பூர் | தொழில் | தலைமை காவலர் |
| தாலுக்கா | திருவெறும்பூர் | வயது | 44/2025 |
| மாவட்டம் | திருச்சி | தேதி | 03.11.2025 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

## <u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது ஸ்ரீரங்கம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2014 ஆம் வருடம் திருச்சி இருப்புப் பாதை காவல் பிரிவு பெண் காவலராக பணியில் இருந்த போது கடந்த 07/05/2014 ஆம் தேதி மேற்படி காவல் நிலைய பணியில் இருந்த போது, அப்போதைய துணை காவல் கண்காணிப்பாளர் தனவேல் அவர்கள் மற்றும் சில காவலர்களும், நானும், திருச்சியில் இருந்து விழுப்புரம் இருப்புப் பாதை காவல் நிலையத்திற்கு மதியம் 3 மணிக்கு ஒரு வழக்கு சம்பந்தமாக சென்றோம். ஆவணங்களை எழுதுவதற்காக என்னை அழைத்து சென்றார்கள். ஜெயவேல் என்பவர் காவல் நிலைய விசாரணையில் இறந்து விட்டதாகவும், அது சம்பந்தமாக விசாரணை செய்யவும், சென்றோம். ஆய்வாளர் திரு.வாசுதேவன் மற்றும் சாட்சிகளை அவர் விசாரணை செய்தார். அதை நான் அருகில் இருந்து அவர் சொல்ல சொல்ல நான் எழுதினேன். என்னிடம் காண்பிக்கப்படும் வாக்குமூலங்களை எழுதியது நான்தான். அதில் உள்ள வாசகங்களை எழுதியது

நான்தான். மறுநாள் 08/05/2014 ஆம் தேதி விழுப்புரம் இருப்புப் பாதை காவல் நிலையத்தில் வைத்து அந்த விசாரணையின் தொடர்ச்சியாக மீண்டும் விசாரணை செய்தார்கள். அவைகளையும் நான் எழுதினேன். இது சம்பந்தமாக என்னை சி.பி.சி.ஐ.டி போலீசார் விசாரணை செய்தார்கள்.

**1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-**

நான் எத்தனை நாட்கள் விழுப்புரம் இருப்புப் பாதை காவல் நிலையத்தில் இருந்தேன் என்றால், 2 நாட்கள் அங்கு இருந்து வாக்குமூலம் எழுதினேன். அதன்பிறகு திருச்சிக்கு சென்று கணினியில் தட்டச்சு செய்து அந்த வாக்குமூலங்களை நான் உதவி காவல் கண்காணிப்பாளருக்கு கொடுத்தேனா? என்றால், நான் கணினியில் வாக்குமூலங்களை பதிவு செய்யவில்லை. கையில் தான் எழுதினேன்.

**2 முதல் 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

இறந்து போன ஜெயவேல் லாக்கப்பில் மரணம் அடைந்ததாக ஆய்வாளர் வாசுதேவனோ, மற்ற சாட்சிகளோ நாங்கள் எழுதியபோது சொல்லவில்லை என்றால் சரிதான். ஜெயவேல் மீது கொடுத்த புகாரின் படி தான் வாசுதேவன் ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்துள்ளார் என்றால், சரிதான். ஹசாரியாவும், மற்றவர்களும் கொடுத்த வாக்குமூலத்தில் ஜெயவேல் என்பவர் ஹசாரியாவிடம் பர்சை திருடிவிட்டு ஒடும்போது, பொதுமக்கள் அவரை பிடிக்க முயற்சி செய்தபோது, ரயில்வே தண்டவாளத்தில் ஸ்லீப்பர் கட்டை கால் தடுக்கி கீழே விழுந்து அதனால்தான் அவருக்கு காயம் ஏற்பட்டதாகவும் சாட்சிகள் சொல்லியுள்ளார்கள் என்றால், சரிதான். மேலும் ஜெயவேலை விசாரணைக்கு காவல் நிலையத்திற்கு வரவழைக்கும் போது, அன்று பகல் சுமார் 12.30 மணிக்கு நெஞ்சு வலிக்கிறது என்று சொன்னதன் பேரில், ஆய்வாளர் வாசுதேவன், மற்ற காவலர்கள் அவரை முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும், மருத்துவர் சிகிச்சைக்கு உட்படுத்தும் போது ஜெயவேல் இறந்து விட்டதாக சொன்னதாகவும், அதன் அடிப்படையில் காவல்துறை துணை கண்காணிப்பாளர் தனவேல் அவரிடம் ஜெயவேல் இறந்தது சம்பந்தமாக வாசுதேவன் ஒரு புகார் கொடுத்தார் என்றும் சொன்னால் சரிதான். ஜெயவேல் ஹசாரியாவிடம் நகை மற்றும் பர்சை திருடிய சம்பவம் 07/05/2014 ம் தேதி காலை 8 மணிக்கு நடந்தது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

**இல்லை**